Manufacture of Basic Medicines

* 14. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to have the basic medicines manufactured at Madras City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : இப்பொழுது ஆரம்பச் சுகாதார நிலையங்கள், மருத்துவ மனைகள் ஆகியவைகளுக்குத் தேவையான மருந்துகள் கிடைக்கவில்லை என்ற குறைபாடுகள் இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அதைத் தடுக்க இவ்வாறு தேவையான மருந்துகள் தயாராக ஆதரவாக இருக்கும்படி அதற்கான நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அது பொது நலத் துறையிலே கேட்க வேண்டிய கேள்வி. இப்பொழுது தமிழ் நாட்டிலே ஐந்து தொழிற்சாலைகள் மருந்துகள் தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கின்றன. ஐ.டி.பி.எல். என்ற ஒரு பெரிய நிறுவனம் சுமார் 233 லட்சம் செலவில் ஒரு புதிய தொழிலை மருந்து உற்பத்திக்காகத் தமிழ் நாட்டில் தொடங்கவேண்டும் என்ற முயற்சியைப் பல ஆண்டுகளாக எடுத்துவருகிறார்கள். நம்முடைய அரசின் சார்பிலே செய்யவேண்டிய உதவிகளையெல்லாம் அவர்களுக்குச் செய்துவிட்டோம். மத்திய அரசு இன்னும் அதைப்பற்றிப் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது.

சாணார்பட்டி, வட மதுரை வட்டாரத்தில் நில நீர்வள ஆய்வு.

* 15 வினா—**திரு. க. நாகராஜன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

Ground Water Cell அமைப்பின் மூலம் சாணார்பட்டி, வட மதுரை, ஆகிய வட்டாரங்களில் நிலநீர்வளம் குறித்து ஆய்வு நடத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. க. நாகராஜன் : தலைவர் அவர்களே, சாணார்பட்டி, வடமதுரை ஆகிய வட்டாரங்களில் நிலநீர்வளம் குறித்து ஆய்வு நடத்தப்படாத நிலையில் கூட பினான்ஷியல் இன்ஸ்ட்டிடியூஷன் எதுவும் கிணறுகளை ஆழப்படுத்துவதற்குக்